**கருவலகஸ்வெவ பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கருவலகஸ்வெவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கருவலகஸ்வெவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது நூல்நிலைய புத்தகங்களின் பெறுமதி ரூபா 54,655 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மிளாய்வாண்டிற்கான கடை வாடகை வருமானம் ரூபா 6,212 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) கருவலகஸ்வெவ அலுவகத்தின் கூட்ட மண்டபத்தின் பெறுமதி ரூபா 793,384 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) 05 நாட்குறிப்பு வவுச்சர்களின் மூலம் வைப்புக் கணக்கின் ரூபா 27,500 வருமானத்தை நீக்குவதற்காக செலவு வைப்பதற்கு பதிலாக வரவுவைத்து திரண்ட நிதியத்திற்கு வரவுவைத்து கடன்பட்டோருக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க நிலுவையாக இருந்த நீர்வரி மீதி ரூபா 2,538,720 ஆக இருந்ததுடன் பட்டோலைகளுக்கு இணங்க ரூபா 2,542,087 ஆக இருந்ததனால் ரூபா 3,367 வித்தியாசமாகும். | எதிர்காலத்தில் இந்த நடவடிக்கையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வித்தியாசத்திற்கான காரணத்தை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,767,461 பெறுமதியான 04 கணக்கு மீதிகளின் பௌதீக ரீதியாக உள்ளமை, பட்டோலைகள் மற்றும் அது தொடர்பான ஏனைய சான்றுகள் இல்லாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | இது சம்பந்தமான எந்த தகவலும் சபையிடம் இல்லை. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக்கூடிய எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரணமாங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரணமாங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நி.பி 571 | 02 ஆண்டுகளை மிகைத்த 07 வைப்புக்கள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | 02 ஆண்டுகளை மிகைத்து வருமானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்காத வைப்புக்கள் சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 1,791,535 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 3,788,308 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 8,797 | 8,452 | 5,116 | 3,159 | 9,111 | 8,090 | 5,043 | 3,513 |
| வாடகை | 4,303 | 2,137 | 1,936 | 1,240 | 4,955 | 3,112 | 1,987 | 1,310 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 179 | 73 | 73 | - | 165 | 64 | - | - |
| ஏனைய வருமானம் | 34,407 | 36,691 | 36,691 | 1,023 | 12,754 | 6,364 | 6,364 | - |
| | ....... | ......... | ......... | .......... | ...... | ......... | ....... | .......... |
| மொத்தம் | 47,686 | 47,353 | 43,816 | 5,422 | 26,985 | 17,630 | 13,394 | 4,823 |
| | ......... | ......., | ........ | ....... | ........ | ....... | ........ | .......... |

### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீதவரி ரூபா 620,738, நீர்வரி ரூபா 2,542,087, வாடகை ரூபா 1,239,679 என்பவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானமானத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் (சமூக நீர் வழங்கல்) கீழ் கருவலகஸ்வெவ சியம்பலேவ நீர் செயற்திட்டத்தின் நீர் தாங்கியினை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,713,219 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் நீர்க் குழாய் இணைப்புக்கள் வழங்கப்படாமையின் காரணமாக அதன் பிரதிபலன்கள் மக்களுக்கு கிடைக்காமல் போயுள்ளது. | தற்பொழுது காணப்படுகின்ற குழாய் முறைமைகளின் மூலம் உப குழாய்களை தொடர்புபடுத்தி பகிர்ந்தளிப்பதினை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நீர் தாங்கிகளுக்கு நீர் குழாய்களை தொடர்புபடுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கிராமிய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,470,000 செலவு செய்து தப்போவ விளையாட்டு மைதானத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் நலன்களை மக்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதன் உரிமை பிரதேச செயலகத்திடம் உள்ளதனால் பிரதேச செயலகத்திற்கு அடிக்கடி தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிர்மாண வேலைகள் முடிவடைந்ததன் பின்னர் துரிதமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாத்தாண்டிய சேமிப்பு வங்கி கிளையில் ரூபா 74,426 பணம் விளைவற்றுக் காணப்பட்டது. | மேலதிக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 6,703,491 ஆக இருந்ததுடன் அதனுள் 03 ஆண்டுகளை மிகைத்த மீதிகளின் பெறுமதி ரூபா 625,415 ஆகும். இந்த நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்க வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,719,311 ஆக இருந்ததுடன் அவற்றினுள் 03 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,280,351 மீதியினைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய பணத்தை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2. செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வீதவரி மறுசீரமைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் 2015 ஆம் ஆண்டில் மேற்கொண்ட வீதவரி மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டிற்கும் வீதவரி அறவிட்பபட்டிருந்தது. | வீதவரி மதிப்பீட்டிற்காக நடவடிக்கை எடுக்கப்படும் | நாளதுவரையாக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு இணங்க வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

**3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மெதகம சிறுவர் பூங்கா நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமையின் காரணமாக அதிக அளவில் காடு வளர்ந்திருந்ததனால் அதில் உள்ள உபகரணங்களுக்கு இயற்கை அழிவுகள் ஏற்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | சிறுவர் பூங்காவினை முன்பள்ளிக்கு ஒப்படைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | பராமரிப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | சபையின் ரூபா 21,198,384 பெறுமதியான 04 சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காணப்படுகின்ற வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு நடைமுறையினைத் தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் 65 ஆதனங்களின் சட்டரீதியான உரிமை சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய ஆதனங்களை பொறுப்பேற்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் மூன்றாம் மட்டத்தில் 01 பதவியும் இரண்டாம் | காணப்படுகின்ற ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு | சபைக்குத் தேவையான ஊழியர்கள் எண்ணிக்கையினை சரியாக |

| | | |
|---|---|---|
| மட்டத்தில் 08 பதவிகளும் ஆரம்ப மட்டத்தில் 06 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இனங்கண்டு அந்த ஊழியர் எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) பிரதேச சபையின் போடோன் உழவு இயந்திரம், மோட்டார் கிரேடர், பெகொ லோடர் ஆகிய வாகனங்கள் செயற்படாது பிரதேச சபையின் வளவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. | திருத்தங்கள் செய்து டயர்கள் வழங்கியதன் பின்னர் ஓடுவதற்கு ஈடுபடுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) உள்ளுராட்சி திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஜீப் வண்டியை சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | பொறுப்பேற்பதற்கு தேவையான நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள 10 பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ரூபா 341,465 பணம் செலவு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்துகொள்ளப்படவில்லை. | எரிபொருள் சிக்கலின் காரணமாக எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தினை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க உரிய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்தி பூர்த்தியாக்கல் மட்டத்தினை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 36 நடவடிக்கைகளுக்காக ரூபா 35,626,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளாது 36 நடவடிக்கைகளும் கைவிடப்பட்டிருந்தன. | வருமானம் கிடைக்காமையின் காரணமாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | பாதீடு செய்யப்பட்ட செயற்பாடுகளை உரிய நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ஒரு கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் அந்த கணக்காய்வுத் திட்டத்திற்கு இணங்க கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 2022 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான தவறுகள் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | முக்கியமான துறைகளை உள்ளடக்கும் வகையில் கணக்காய்வினைத் திட்டமிட்டு கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |